

T4508

# தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



14

1977—அக்டோபர்

# மொடவாண்டிப் பட்டா

தேனோலை

பதினான்காம் இதழ்—அக்டோபர் 1977

பதிப்பாசிரியர்

கொடுமுடி சண்முகப் பிரகதம்

பதிப்பாளர்
© ச. பிரகதம் (1947)
54 ஏ, வேலூர்ச் சாலை
திருச் செங்கோடு 637211

விலை ரூ 1.00
ஆண்டுக் கட்டணம் 4.00

எழுத்துச் சீர்மை

1. பெரியார் புழங்கியபடி
லை, ளை, ணை, னை, னா, ணா, றா
2. உகர, ஊகார உயிர்மெய் வரிசைக்குப்
பக்கக் குறிகள் (ு, ூ) இடுதல்.
3. உயிர்நெடில்களுக்குக் கால் வாங்குதல்.

நெல்லும் உயிரன்றே
நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அச்சிட்டோர்
நாரா. நாச்சியப்பன்
நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை-600014

# மொடவாண்டிப் பட்டா

## அறிமுகம்

1. கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலத்தில், முடவர்களுக்கான இலவசப் புகலிடம் ஒன்று இருந்தது. அதனைத் தற்போது கோவை நகருக்கு மாற்றிவிட்டதாகத் தெரிகின்றது. சத்தியமங்கலத்திற்கே மொடவாண்டிச் சத்யமங்கலம் என்ற பெயர் வழங்கி வந்துள்ளது.

## 2. முடவர் புகலிடம்

முடவர் புகலிடம் அமைந்த விதம் பற்றிய செவிவழிச் செய்தி இப்பட்டயத்தில் கூறப்பட்டுள்ளது. அதை வெறும் முன்னுரையாக மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும். முடவர் புகலிடத்தின் தொடர் செலவுகளுக்காக, கொங்குக் குடிகள் அளித்து வந்த நன்கொடைகளின் விவரம் கூறப்பட்டுள்ளது. அண்மைக் காலம்வரை இப் பழக்கம் தொடர்ந்து வந்தது.

## 3. சுவடி

இப் பட்டயம் ஓலைச்சுவடியில் உள்ளது. காலஞ் சென்ற கொங்குப் பெரும்புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரின் சேமிப்பில் கிடைத்ததாகும்.

## 4. படித்தோர்

இதனைப் படித்து எழுதும் முயற்சியில் பங்கு கொண்டோர் சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறட் துறை அறிஞர் சண்முகனர், ஈரோடு புலவர் செ. இராசு, பொறியாளர் கொடுமுடி சண்முகன் ஆகியோர்.

## 5. காலம்

காடை குலேசன் தண்டிகைத் துரை என்ற தலைவன் காலத்தில் எழுதப்பட்டது. அவன் 17ம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். உட்கதையில் வரும் காலம், கலியுகம் மூவாயிரத்தி யெண்ணூத்தித் தொண்ணூத்தாறு, ஆனந்த ஆண்டு, கார்த்திகை மாதம், இருபதாந்தேதி, உத்திரட்டாதி நட்சத்திரம், வெள்ளிக் கிழமை.

இதில் கலியுக ஆண்டு நாலாயிரத்தி யெண்ணூற்றுத் தொண்ணூற்றாறு ஆக இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. 1794 ஆம் ஆண்டு ஆனந்த வருடம் பொருத்தமாக உள்ளது

## 6. செய்தி

அரசியல் பிரதிநிதியாக இருந்த ராயர், அவரது அதிகாரிகளில் ஒருவரான துளுவ நாயக்கர், தமது பரிவாரங்களுடன் காவிரியில் வெள்ளம் பெருக்கிட்ட காலத்தில் பவானி கூடுதுறையில் தண்டு இறங்கி இருந்தபோது, காவிரியில் ஒரு பெட்டி மிதந்து வருகின்றது. பெட்டியைக் கரைக்கு எடுத்து வந்து பார்க்கின்றனர். உள்ளே உதய சூரியன் போன்ற பிரகாசமான குழந்தை ஒன்றுள்ளது. ஆனால் அதன் ஒரு கால் முடமாக உள்ளது. குழந்தையை வளர்க்கும் பொறுப்பு துளுவ நாயக்கரிடம் விடப்படுகிறது.

பின்னர் அந்தப் பொறுப்பை 24 நாட்டுக் கொங்குக் குடிமக்கள் ஏற்கின்றனர். சத்தியமங்கலத்திற்கருகில் உள்ள தண்டிகையில் ஒரு புகலிடம் ஏற்படுத்தப்படுகிறது. உம்பழத்தம், செம்பத்தொழு, புன்னைமேடு, சோழனூர், கோட்டூர், தண்டிகை, சத்தியமங்கலம் ஆகிய ஏழு, கிராமங்கள் தானமாக அளிக்கப்படுகின்றது. எண்ணாயிரம் பொன் முதலீடு வைக்கப்படுகிறது.

தொடர் செலவுகளுக்காக எல்லாச் சாதியினரும் தம் உழைப்பின் பயனை நல்க வேண்டும்.

## 7. சிறப்பு

சமுதாயத்தில் முடவர்களை ஆதரிக்க வேண்டித் தனியாக ஒரு நிறுவனம் அமைத்து பாதுகாப்பு ஏற்பாடு செய்தது அரிய நற்செயல் ஆகும். அண்மையில் அரசாங்கம் இரவலர் இல்லங்கள் தொடங்கி வைத்தது போன்ற நற்செயல் 200 ஆண்டுகட்கு முன்னரே கொங்கு நாட்டில் நடைபெற்றுள்ளது.

உ

ஹரி ஓம் நன்ருக !

குருவாழ்க! குருவே துணை!

# மொடவாண்டிப் பட்டா

காப்பு

(பூந்துறை நாட்டு அம்மைமேல் பாடல்)

மார்மேவு பூந்தரசர் வாழுநாடு
சத்திமங்கை வருகோ தண்டால்
பூமேவு காராளர் கிளைவாழ்க
பெருமைசேர்ப்பார் பருவ நாட்டில்
பார்மேவு ஞானஉமை ஈசு
பரர்மேல் செந்தமிழைப் பரிந்துபாடக்
கார்மேவு தடவிகட மதமொழுகும்
கரிமுகனுங் காப்ப தாமே !

பூமண் டலத்தில் புகழது விளங்க
மாமண்ட லீகர் வந்தடி பணிய
ஆறிரு கரமும் ஆறிரு புயமும்
ஆறிரு விழியும் ஆறிரு பதமும்
சண்முகம் ஆறும் சாற்றிய நீறும்
வன்மையால் வேலும் வளர்தண்டைக் காலும்
சரவண முருகன் சங்கரி குமரன்
அரிவினில் துயிலும் அச்சுதன் மருகன்
அன்புடன் வள்ளிதேவி யானையை மணந்தோன்
தென்புட னிருக்கும் சென்னியங் கிரிசூழ்
பூந்துறை தன்னில்ப் புட்பவ நேசன்
பாந்தக மான பாகம் பிரியாக்
காரணிக் கரிய காழிநா யகியும்
தாரணி புகழும் தாமோ திரரும்
அத்தனூ ராயி அங்காள தேவி
கர்த்தனாய் விளங்கும் காசி லிங்கரும்
யாவருந் தேவர் அனுதினங் கா [க்க]
காவல னான காடை, குலேசன்

தாரணி மதிக்குந் தண்டிகைத் துரையாம்
வாரண வாசி மகபதி வாளும்
பூந்துறை சேந்த புகழ்முட வாணர்
வாழ்ந்திடுஞ் சத்தி மங்கையில் மேவும்
கங்கையும் பிறையுங் கடுக்கை யணிந்த
சங்கரி விமலன் சத்தியீசு பரராம்
இன்பமே யுதவும் ஈசுபரி தேவி
அம்பிகை புகழ்தயில் அம்மைநா யகியும்
நேயமா யுலகை ஒபாயமா யளந்த
மாயவர் வரதர் தாயர் தன் னுடனே
பார்பதி பூதப் படைகள் தன் சேனை
சீர்பெறப் படைத்த செல்லாண்டி யம்மன்
ஆழிசூழ் புவியில் அத்தனூ ராயி
சோழநா றம்மன் துரையண்ண மாரும்
வேட்டைகா ரர்களும் மிக சோழ செட்டி
யாட்டிமை புரியும் அங்கா ளம்மன்
அந்தரி மாரி அழகு நாயகி
செந்தமிழ் பெருகுமேச் சேரி யம்மாள்
பாக்கிய முதவும் படைவெட்டி யாயி
வாக்கது பிசகா மாமுனி யண்ணன்
சத்தகன் னியரும் தாய்பக வதியும்
மெத்தவே வரங்கள் வேணது கொடுக்க
யாவருந் தேவர் மனமது மகிழ்ந்து
தினசரி காக்கச் செயமது படைத்தோர்
தரணியில் கலியுக சக்கரந் தன்னில்
அருமை மூவா யிரத்தியெண் ணூத்தித்
தொண் ணூ த் தாரும் துலங்கிய வரையில்
நன்றாய்த் தருமம் நடத்திய நாளில்
வாளி யானந்த வருசம்· ஆளிசூழ்
மாசமு அதுகார்த் திகையில் யிதுவுமே
தேதி யிருபத் தாண்டில் உதவும்
உத்திரட் டாதி உயிர்வெள்ளி நாளில்
அசுபதி திசுபதி செயபதி நரபதி
யான செங்கோல் நடத்தும் அந்த
நாளையி லேஆவு வொரு பொதி பால்
விந்தையா யளக்கும் விதமுள்ள தவசம்
காசொன்று குடுத்தால் கலமது அளக்கும்

நேசமாப் பணத்துக்கு நெல்லுப் பதிங்கலம்
அடவுடன் செம்பொன் அள்ளியே பிச்சை
இடுவதல் லாமல் யேற்பவ ரில்லை
மாதமூன்று மாரி போதவும் பொழிந்து
நீதியாய் நடக்கும் ஆதிநா ளையிலே
எண்ணரி தானம் ஈந்த காராளன்
வெண்ண நல்லூர் சடையன் முன்மனை தனிலே
மன்மத வடிவாய் மதியினில் ஒளிவாய்
முன்னு லெழுத்தால் முடவனைப் பெற்றுள்
ஆன்றதோர் சேதி அடவுட னறிந்து
என்னமோ பாவம் எழுவதறி யாமல்
வந்ததோர் அந்த மதலை யதனை
அந்தமா யொருத்தர் அறிந்தறி யாமல்
பொங்கமாய்த் தங்கப் போழையில் வைத்து
கங்கைபோல் பெருகும் காவேரி யாத்தில்
விட்டமாத் திரத்தில் மிதந்துதான் போழை
சட்டமாய் வருது தனித்தொரு வர்க்கும்
அமடு படாமல் ஆற்றினிலே தான்
குமிடுகள் தாண்டி கொல்லுவாய் கடந்து
நாடு கடந்து நடுக்கான கத்தில்க்
கூடு துறையில் குலாவியே வரையில்
கருணைசேர் மல்லிக் காச்சு ராயரும்
அருணனை நேரும் அதிவீர ராயர்
மனுநீதி பிரவுடைய மகாதேவ ராயர்
அனுதரை வெல்லும் அச்சுத ராயர்
கோவிந்த ராயர் கொங்கண ராயர்
கோபால ராயர் தேசமே யாளும்
தேசமே யாளும் சிகராத்தி ராயர்
மாசில்லாப் புகழ்சேர் மதுடவர்த் தனரும்
ராச்சியத் துள்ள நற்குடி படையும்
உட்துரை ராய ருடன்துரை மக்கள்
சேருவை காரர் சேனை யோர்களும்
பாரினி லுள்ள படைத்தலை வீரர்
பேரணி முழங்கப் பெரிய ரதந்
தன்னில் ராயர் தான்கொலு விருக்க
மன்னியர் வணங்கி மணிமுடி பணிந்து
சொன்னது வயணஞ் சுவாமிதே வேந்திரா

மின்னுகா வேரி வெள்ளமே பார்க்க
அப்பனை செய்யும் அய்யனே இன்னமே
இப்புடன் ராயர் மிகமன மகிழ்ந்து
சதுரங்க சேனை தளமது சூழ
விதமுட னெழுந்து வேடிக்கை பார்க்க
துளுவநா யக்கர் துரைமக் களுமாய்
அளவில்லாச் சேனை அதிகயோ பழியார்
பெரியகா வேரி பெருகி வெள்ளம்
வருவது பார்க்க மன்னர் மன்னிப்பாக
அலையுட னலையாய் அதுதங்கப் போரை
துலையினில் வாற துலக்கத்தைக் கண்டு
ராயருந் துளுவ நாயக் கருமாய்ப்
பேசிய தங்கப் போழை நம்முழுது
போரையில் வார பெருமுத லெல்லாம்
வாளியா யுங்கள் வசமெனச் சொன்னர்
சொன்னமாத் திரத்தில் துளுவ நாயக்கரும்
உன்னித மாக ஒரு சினங் தன்னில்
இருகரை யதுவும் ஒருகரை யாகப்
பெருகியே வெள்ளம வருகிற ஆத்தில்
காகமாய்ப் பறந்து கயினீச்சங் தன்னில்
பாகமாய்ப் போரைப் பக்கமே சென்று
தாவிப் பிடித்துத் தணைக்கரை யேற்றி
மேவியே போழை விதமுடன் அவிழ்த்துப்
பார்க்கும் பொழுதில் பகவா னொளிவுபோல்
ஏற்கவே குழந்தை இருகால் முடமாய்
இருந்தது கண்டு இனியதேர் ராயிர்
பொருந்திய துங்கள் புண்ணிப மென்று
பரிவு டன்முடப் பயலையு மெடுத்துப்
பிரியமாய்க் கொடுத்துப் பின்னுமே ராயர்
வேண்டிய வரிசை விளங்கவே தருவோம்
ஆண்டுகொண் டிடுவீர் அன்னம் போல் வளர்த்து
யென்றுதான் ராயர் இம்மொழி யுரைக்க
நன்றெனத் துழுவ நாயக்கர் வளர்த்தார்
அப்படி யிருக்கும் அந்நாளி லேதான்
செப்பமாய் ராயர் சிந்தையை மகிழ்ந்து
தன்னுட ஆக்கினைச் சக்கரமே நடத்தி
மின்னி லிருங்கா ராளர்

நாலாறு நாட்டில் நற்குடி படையை
வாலாய மாக வரவழைத் துடனே
பருவமுஞ் சொல்லிப் பாரினி லுங்கள்
அருமைசேர் குழந்தை அதுகால் மூடமாய்
ஆற்றினில் வந்து அதுதனை யெடுத்து
சொந்தமாய் வளர்த்தச் சொன்னசொல் படியே
நன்றெனத் துளுவ நாயக்கர் வளர்த்தார்
அவர்க்கின்று தன்வரிசை யெல்லாம்
வரிக்கல்லுக் காவேரி காசியும் பூமிஆகாசம்
அரியசந்திர சூரியர்க ளதவுள்ள வரைக்கும்
இந்திர தேவர்களை யெல்லா மறிய
உற்றொரு கெடிக்கொரு உம்ப ழத்தம்
வெற்றிசேர் கின்றமிக செம்பத் துளுவும்
மன்னவர் புகழ்அழுந்த தேவார
புன்னைமேட் டுடன்புகழ் சோழ னூரும்
ஆண்டா வந்தி அதுகோட் டூரும்
தண்டிகைப் பரிக்குள சத்திமங் கையுடன்
ஏழு கிராமம் எண்ணு யிரம் பொன்னுச்
சீமை யென்று கல்லுவெட்டு சூழவே போட்டு
மேதினி யரிய ஆகாசம் பூமி
அதுவுள்ள மகிழ
வாகான சுங்கம் மணவரி யில்லே
எருமைவரி யில்லே
நல்மாடு நச்சேரை யில்லே வேட்டி
பொட்டணமும் இல்லை பேயிற மழைக்கி
யெறைக்கிற வெய்யிலுக்கு பயந்து பிழைக்கவும்
ஏறுரு மயேசுபரர் யேழுல கரிய
ஈன்றகா ராளர் வண்மை சேருகின்ற
பட்டிக்கு ஒருபணம் நகரம்
வண்மையாய் இருந்து வாழும் வீட்டுக்குச்
சத்தியாய்த் தவசம் எட்டு வள்ளம்
வர்த்தனை என்று வாச்சாத முகமும்
தந்துதான் ராயர் சமுகந் தனிலே
விந்தையாய் நாலு வெகுமதி யுதவி
பாங்குடன் உண்டு பண்ணும் வர்த்தனையே
இதுநாங் களே யென்று நடத்தின பேர்கள்
ஒன்று லட்சமாய் உலகுள்ள மட்டும்

சென்றிட மெல்லாஞ் சிறப்புட னிருப்பான்
இதை,
ஆதா மொருவன் அடுகள நினைந்தால்
மாதா பிதாவை வதைத்திட்ட பாவம்
பெறுவான் கவுசுடன்
கங்கைக் கரையினிலக் காராம் பசுவைக்
கழுத்தை அறுத்திட்ட பாவம் பெறுவான்
பெத்த பிள்ளையைப் பெண்டு பிடிச்ச
தோசத்தி லேபோகக் கடவனே
என்றுதான் ராயர் இம்மொழி யுரைக்க
அன்றுகா ராளர் அனைவரும் மதித்து (சம்மதித்து)
நாடது கூடி நடத்தும் வர்த்தனையே
யூரெல்லாந் தேடி உடன்வர வழைத்து
முந்தின பிள்ளைக்கு முதலிவ னென்று
சொந்தமாய்க் கொதிபால்ச் சோறது போட்டு
ஆதரித் திட்டோர் அவங்கள் கோத்திரமும்
பூதல மீதில் புகழது விளங்கி
ஆடுமாடு எருமை முத்தவமும்
தேடியே படைத்துச் செல்வமும் மேலும்
சவுபாக் கியமும்
புவிமேல் படைத்துப் புண்ணிய முண்டாம்
மார்க்கண்டனைப்போல் வயதுதான் வாழ்ந்து
ஏற்கவே இருப்பார் இந்திரன் போல
நற்குடி நாற்பத் தெண்ணாயிரம்
பசுங்குடி பன்னீ ராயிரம்
சக்கிரை விளங்கித் தான்நிலை நாட்டி
வாய்த்திடுஞ் சதமங்கை மயேசுபரர் அறிய
யெத்திசை மதிக்கும் இவர்முட வாண்டார்
காரண குருவே காசினியில் விளங்கும்
பூரண கிருபை புரிந்தடி யார்க்கு
மந்திரம் ஞானம் மகிழ்ந்துப தேசம்
தந்துலச் சற்குரு மூர்த்தி
செழுந்திரு விளக்கத் தேவியர்ச் சனைசெய
குழந்தையா னந்தர் குருபதம் பணிவோம்!
கொங்குவெள் ளாளன், கொங்கு வேட்டுவன்,
கொங்குச் செட்டி, கொங்கு இடையன்,
கொங்குச் சாணன், கொங்குக் கொசவன்,

பூவுலவன், காவுலவன், கொங்குப் பறையன்,
எட்டுஆடு படைச்சவன், இளங்கொடுவாள் பிடிச்சவன்,
கூனும் குருட்டை அடுச்சவன், கொலேக்க
நாயி வச்சிருந்தவன்.
வாடா போடா யின்னவன். வாசலில்
பகல் முப்பது ரெகு முப்பது.
மொண்டிக் காலா முடக்கால் முண்டி
முடம் முன்னேப் பிறப்பில் கூனும் குருடும்
கூட்டில் அடைக்க, ஊமை செவிடு
உண்மையாய்ப் பிறக்க, ஆட்டுலே மாட்டுலே
கோழியிலே குஞ்சிலே மக்களிலே மருமக்களிலே
ஏழு சென்மம் இருபத்து நாலு
தலேமுறைக்கு இருந்து பிறக்க, நின்று
விரைக்கக், குமுஞ்சு பொருக்க, இப்படி
இட்ட சாபம் பலிக்க
ஆத்துத் தண்ணியைத் தாரை வார்த்தால் தண்ணூறு
வத்துமென்று தங்கத்து மணலே அள்ளித்
தாரை வார்த் தால். அள்ளி வாக்கையிலும்
சொல்லி வார்த்தார். யிதை ஆதா மொருததர்
அறிஞ்சு நடத்தினவன் அவன்
பாதம் ஒன்பது ராயர் சிரசுமேலே
கொங்கு வேட்டுவன் வர்த்தினே ஒரு ஊட்டுக்கு
யெட்டு பணம் போட்ட பட்டிக்கு ஒரு பணம்
நகரம் கொங்குச்செட்டி வர்த்தனே ஒரு வூட்டுக்கு ஒரு
பணம். நகரம் கொங்கு இடையன் வர்த்தினே.
ஒரு வூட்டுக்கு ஒரு பணம்,
நகரம் போட்ட பட்டிக்குக் கிடாய் ஒன்று
புலவன் வர்த்தினே ஒரு வூட்டுக்கு பணம் 4 ஒரு பணம்
நகரம் போட்ட பட்டிக்கு ஒரு பணம் நகரம்
காவிலியன் வர்த்தினி ஒரு வூட்டுக்கு
பணம் 4 போட்ட பட்டிக்கு ஒரு
பணம் நகரம் பூவுலியன் வர்த்தினே வூட்டுக்கு
பணம் 4 போட்ட பட்டிக்கு ஒரு பணம்
நகரம் சாணு வர்த்தினே
ஒரு வூட்டுக்கு அரை துலாங் கருப்பிட்டி
கொசவன் வர்த்தினே ஒரு வூட்டுக்குப் பத்தெட்டு உருப்புடி

கப்பரை அஞ்சு

பறையன் வர்த்திஊை ஒரு வூட்டுக்கு யெருத்துக்குப் பில்லும் யேரி கரும்பும் நாலு கோழியும்.

ம்யேசவரர் வாழி, உத்தோர் வாழி

உறைமுறை முடவாண்டார் வாழி வாழி.

காராளர் வங்குசம் வாழி.

நின்று இருபத்தி நாலு நாட்டாரும் வாழி.

தர்ம்மந் தழைத்துத் தரணி செழித்துப் பொன் மழை பொழிந்து போதவே விஊையும், சத்திலிங்கர் லட்சிப்பார்.

மயேசுபரர் துஊை, உமையவள் துஊையுண்டு, தெண்டபாணி துஊையுண்டு. சரஸ்வதி துஊை.

# வேம்பத்திக் கல்

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வேம்பத்தி கிராமத்தில் வேட்டுவன் தோட்டத்தில் ஒரு குத்துக்கல் உள்ளது. நாலரை அடிக்கு இரண்டரை அடிக் கல்லில் எழுத்துக்கள் உள்ளன. புலவர் செ. இராசு அவர்கள் படித்துள்ளார்கள்கிபி 1066ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.

வியாபாரிகளுக்கு ஒரு பட்டணம் அமைத்துக் கொடுத்த வரலாறு கூறுகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிரசா சேகரி பன்
2. மராகிய ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்குத் திரு
3. வெழுத்திட்டுச் செல்லா நின்ற யாண்டு நா
4. லாவது. சையமுரி நாடாழ்வார் நாட்டு வ
5. டகரை விக்ரம்பலவபுரத்து நகரத்து
6. பல நாநா தேசிகர்க்கு வீர பட்டணம் செய்து குடு
7. த்தோம். நாடாழ்வாரை வெட்டின மதிரை
8. இருக்கும் பிராந்தக தேவன் நான்கொரு ம
9. ண்டலம் உய்யக் கொண்டானும் மூசிறியான
10. மும்முடிச் சோழ புரத்தில் தந்திர சோழ மூத்தரை
11. யனை வெட்டின பிழைக் கண்ட மாயும்
12. தொண்டை நாட்டில் தூர கல்லூர் இருந்து வாழ்கு
13. ற வேடன் வெட்டினாரையும் விடங்க செட்
14. டியும் பாண்டி நாட்டில் கல்லக நாட்டி
15. காக்கையானதுள் கோதை சேர்வையான் படை
16. நாயகனை வெட்டின வீரகளம் தவையும்

17. பருத்திப் பள்ளி நீர்ந்த ராஜேந்திர சோழப் பெருனீர
18. வீரமாணிக்கஞ் செட்டியும் சேந்தன் திருக்கு.....
19. வாழ் நாநாதேசி யாக்கவிரை விடங்க
20. ஞ் சாத்தன் பாவையான் திசையாயி
21. ரத்தைஞ் ஞூற்றுவப் பிள்ளை க
22. ண்ட மாயும் அரையம் மாயீவிட்
23. டியான் வீரகளம் தலையானும் சிக
24. மூநான் அஞ்நூற்றுவரு
25. ம் அஞ்சுகரை நாட்டுக் கவரை விடங்க
26. னும் கவரை களமாலையும்
27. வீரகளமாக வத்து மாலையும்
28. பேர புத்திரனும் மூனவர் சிவகாழி
29. ம் வல்லகைமார் வத்தும் நய்ப்
30. பிள்ளைச் சித்திரவாளியும் மடிகைக்க
31. ண்டழியுமாயும் வாளைப் பூவும் தெ
32. ண்டிக் காசைக் காழ்ழத் தலைக்கு
33. த் திருச்சித்திர வாலியும் பிள்ளைப்
34. பத்திரவனும் ஏரியும் விடங்க செட்
35. டியும் விவரப்படி இவ்வூர் மாடுங்
36. காக்கும் தர்மம் இவ்வூர் வீர
37. சாசனம் செய்தோம். இவ்வனைவோ
38. ம் முள்ளிட்ட வீர பெருன்னீர (வியோம்)
39. தன்ம சாதனம் இறக்கினான் கெங்
40. கையிடை குமரியிடை, எழுந்நூ
41. றுக் காவதத்துள்ளார் செயித பாவ
42. ம் கொள்வார். நோக் கொண்ட வீர
43. புரமாவதாகவும். இப்பரிசே
44. பட்டணம் செய்தோம். இவ்வனைவோ முள்ளி
45. ட்ட நீர பெருன்னீரவியோம். அறம் மறவற்க.

இதன் செய்திகளைச் சுருக்கமாகக் கூறிவிடுகிறோம். பட்டணம் என்பது கடற்கரையைக் குறித்து வந்தது. காலப் போக்கில் வணிகத்தலம் என்ற பொதுப் பொருள் வந்துவிட்டது. உள் நாட்டில் ஆங்காங்கு முதன்மையான வணிக தலங்களை அமைத்து கொண்டுள்ளனர். அங்கு எல்லா நாட்டு வணிகர்களும் வந்து வியாபாரம் செய்யலாம். அதனாலேயே நாநாதேசிப் பட்டணம் என்றாயிற்று.

இராசேந்திர சோழனின் நாலாம் ஆண்டு என்று காலம் சுட்டுகிறது. இவன் இராசகேசரி என்ற பட்டம், பூண்டுள்ளான். மூன்றாம் இராசேந்திரர்கள் மூவரும் பரகேசரிப் பட்டம் பூண்டவர்கள். வீரராசேந்திரன் என்று பெயர் கொண்டவன் இராசேசுரி எனப் பட்டம் பூண்டுள்ளான். அவன் ஆட்சித் தொடக்கம் 1062 எனவே இக் கல்வெட்டின் காலம் 1066 எனக் கொள்க.

இப் பட்டணம் அமைத்தவர்கள் பெயரும் வீர வரலாறும் உள்ளது. பிழை நீக்கி நிதானமாகப் படித்தறிக.

இது இராசிபுரம் அருகில் உள்ள பட்டணம் ஆகும்.

"அறம் மறவற்க" என்று முடியும் இறுதிச் சொற்கள். உன்னி, உன்னி உவகை கொள்ளத் தக்கன.

இக் கல்வெட்டிற்கு நல்ல உரைநடையும், பொருளும் எழுதி அனுப்புக. குறிப்பாக "பெருன்னீரவியோம்" என்ற சொல்லை ஆராய்ந்து எழுதுக.

கொடுமுடி
31-10-77



OFFICE OF THE CURATOR
RECEIVED
ஜூப் 1985
CHENNAI, MADRAS-5
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

**All kinds of types from Scootters to Tractor Tyres are retread most scientifically in our Modern Plant**

GOVT. OR. MSS. LIBRARY
MADRAS
Date of Accession 18.2.1985
Accession No. 23345
Section Tamil
Ref. No. T4508

OFFICE OF THE CURATOR
RECEIVED
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
CHEPAUK, MADRAS-5

*FOR QUICKER AND DEPENDABLE RETREADING*

Contact :

# The Anamallais Retreading Corporation

42, MOUNT ROAD, : : GUINDY,
**MADRAS-600032.**
Dial : 433286 - 433287 - 433288

ஆசிரியர், வெளியிடுபவர் : ச. பிரகதம், திருச்செங்கோடு
அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.